**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவிடைமருதூர்**

முன்னிலை: திரு.**நா.சிவபழனி, B.A.,B.L,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருவிடைமருதூர்

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக் கிழமை

**அசல் வழக்கு எண். 41/2021**

**(CNR.No. TNTJ 270004882021)**

----

பன்னீர்செல்வம், வயது 68/2021,
த/பெ. ரெங்கநாதன்,
காரைக்கால் மெயின்ரோடு,
ஆண்டலாம்பேட்டை,
திருவிடைமருதூர் தாலுக்கா. ......வாதி

/எதிராக/

1. சுந்தரேசன், வயது 78/2021,
த/பெ. ரெங்கநாதன்,
2. ராஜவேலு, வயது 45/2021,
த/பெ. சுந்தரேசன்,
3. பழனி (எ) சங்கர், வயது 34/2021,
த/பெ. சுந்தரேசன்,
மூன்று பிரதிவாதிகளும் வசிப்பது
மெயின்ரோடு, பூம்புகார் சாலை,
சூரியனார் கோவில், திருவிடைமருதூர் தாலுக்கா. ...பிரதிவாதிகள்

வாதியின் தாவா சொத்தில் அமைதியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ அல்லது அவரின் சம்மந்தப்பட்டவர்களோ அல்லது வேறு எவரும் எந்த வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் செலவு தொகைக் கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வ வழக்கு முன்னிடப்பட்ட நாள் | 16/04/2021 |
| வழக்கு கோப்பில் எடுக்கப்பட்ட நாள் | 16/04/2021 |
| வழக்குமூலம் ஏற்பட்ட நாள் | 19/11/1996, 24/03/1998, 31/03/1998, 22/12/1999, 31/12/1999, |

| | |
|---|---|
| | 13/10/1999, 03/03/2000, 25/01/2021, 01/02/2021, 03/03/2021, 10/04/2021, 15/04/2021 |
| வழக்குமூலம் ஏற்பட்ட இடம் | திருமங்கலக்குடி கிராமம், திருவிடைமருதூர் தாலுக்கா. |
| வழக்கு பெருமானம் ர | ரூ.1,000/- |

இந்த வழக்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டப்பிரிவு 27(c)-ன் படி ரூ.30/- நீதிமன்ற கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

இத்தாவா இந்நீதிமன்றத்தால் கடந்த 16.04.2021 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.R.முரளி, B.L.,** அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.C.கோவிந்தராஜன்,**B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு சாட்சியங்கள், ஆவணங்கள் மற்றும் வாதங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**தீர்ப்பாணை**

1. வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சமரச உடன்படிக்கையின் அடிப்படையில் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு வழங்கி உத்தரவிட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

2. செலவுத் தொகை இல்லை.

**<u>சொத்து விவரம்</u>**

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தாலுக்கா, திருவிடைமருதூர் சார்பதிவகத்தினை சேர்ந்த திருமங்கலக்குடி கிராமம்.

1) புல எண் 188/1-ல் உள்ள 9 ஏக்கர் 30 செண்டில் நடுபாகம் 3 ஏக்கர் 84 செண்ட் நஞ்சை.

2) புல எண் 188/1-ல் உள்ள 9 ஏக்கர் 30 செண்டில் மேல்புறம் 1 ஏக்கர் 02 செண்ட் நஞ்சை மற்றும் புல எண் 188/2-ல் உள்ள 32 செண்டில் 16 செண்ட் புஞ்சை, புல எண் 188/3-ல் உள்ள 23 செண்ட் புஞ்சை,

3) புல எண் 188/1-ல் உள்ள 9 ஏக்கர் 30 செண்டில் 1 ஏக்கர் 03 செண்ட் நஞ்சை மற்றும் புல எண் 188/2-ல் உள்ள 32 செண்டில் தென்பாகம் 16 செண்ட் புஞ்சை.

4) புல எண் 181/10-ல் உள்ள 28 செண்ட் புஞ்சை.

5) புல எண் 181/11-ல் உள்ள 30 செண்ட் மற்றும் புல எண் 181/12-ல் உள்ள 16 செண்ட் புஞ்சை.

6) புல எண் 179/9-ல் உள்ள 44 செண்ட் நிலத்தில் 34 செண்ட் புஞ்சை மற்றும் புல எண் 179/10-ல் உள்ள 10 செண்ட் புஞ்சை புல எண் 179/11-ல் உள்ள 13 செண்ட் புஞ்சை ஆக கூடுதல். 57 செண்ட் புஞ்சை.

7) புல எண் 179/12-ல் உள்ள 14 செண்ட் புஞ்சை.

ஆக கூடுதல் 7 ஏக்கர் 66 செண்ட் விவசாய சாகுபடி நிலங்கள் ஆகும்.

## செலவுத் தொகை பற்றிய விபரம்

(வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் செலவுத் தொகை பட்டியல் முன்னிடப்படவில்லை)

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ம் நாள் வெள்ளிக் கிழமை எனது கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இட்டு வழங்கப்பட்டது.

ஒப்பம் (P. ரெங்கேஸ்வரி )
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)